Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate, Gingee
C.C.No.107 / 2020

PW -2

Name -மங்கலட்சுமி

Father Name -க/பெ குமார்

Village -தாங்கல் கரை

Taluk -

Religion -

Age - 45

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26.10.2021

முதல் விசாரணை

நான் தாங்கல் கரை கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா1 என் கணவர். இவ்வழக்கு விபத்தில் இறந்த சுப்பரமணி என்பவர் என் மாமனார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும், என் மாமனார் மீது மோதி விபத்து ஏற்படுத்திய லாரியின் ஓட்டுனர்தான் ஆஜர் எதிரி . கடந்த 2019 ம் வருடம் தேதி மாதம் ஞாபகம் இல்லை காலை 6.30 மணிக்கு நான் என் மகளை காலேஜ் எக்ஸாமிற்கு திண்டிவனத்திற்கு பஸ் ஏத்தி விடுவதற்காக தாங்கல் கரை பஸ்டாப்பில் ஏத்தி விட்டுவிட்டு நான் நின்று கொண்டியிருந்தபோது திருவண்ணமாலை யில் இருந்து செஞ்சி மார்க்கமாக சைக்கிளில் வந்து கொண்டுயிருந்தபோது திருவண்ணாமலையில் இருந்து செஞ்சி மார்க்கமாக செல்வவிநாயகர் என்று எழுதப்பட்டு இருந்த பச்சைகலர் லாரி ஒன்று வேகமான ஆரண் அடிக்காமல் என் மாமானார் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டு நிற்காமல் சென்றுவிட்டது. விபத்தை நேரில் பார்த்த நான் சத்தம் போடவே அருகில் இருந்த ஆனந்த் , விஜி ஆகியோர்கள் வந்தார்கள். என் மாமனார் தலையில் அடிப்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். பின்னர் நான் கோபால் கிருஷ்ணன் , மற்றும் ஆனந்த் உதவியுடன் சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். பின்னர் என் மாமனார் பிரேதத்தை போஸ் மாட்டத்திற்கு செஞ்சி அரசு மருத்துவமணைக்கு எடுத்துசென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்த போது என் கணவர் கழனியில் இருந்தார். அவருக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது. ஆனந்தன், கோபாலகிருஷ்ணன், விஜி ஆகியோர் நான் சத்தம் போடவே அங்கு வந்தார்கள். அவர்கள் ரோடு அருகே கழனியில் வேலை செய்துகொண்டு இருந்தார்கள்., நான் சத்தம் போட்ட பின்புதான் கோபால கிருஷ்ணன் , விஜி ஆகியோர்கள் வந்தார்கள். அவர்களுக்கு எந்த வாகனம் மோதியது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். எனக்கு எழுதபடிக்க தெரியாது. எனக்கு எழுதபடிபக்க தெரியாத நிலையில் யார் லாரியில் செல்வவிநாயகர் என்று எழுதப்பட்டதாக கூறினார்கள் என்றால் நான் வாகனத்தை சிசி டி.வில் அடையாளம் காட்டம்போது போலிசார் அந்த வாகனத்தில் செல்வ விநாயகர் என்று எழுதப்பட்டு இருப்பதாக கூறினார்கள் எனக்கு அந்த வாகனம் தான் விபத்து ஏறப்டுத்தியது என்று நன்றாக அடையாளம் தெரியும். விபத்து

ஏற்படுத்திய லாரி  அனைத்து பகுதியிலும் பச்சை கலரில் இருந்தது.  தற்போது சாட்சி அவர் பார்த்த இடது புற மற்றும் வல புறத்தில்  பகுதியில்  பச்சை கலரில் இருந்ததாக குறிப்பிடுகிறார். நான் விபத்து ஏற்படுத்திய லாரியின்  முன் பகுதியை நான் பார்க்கவில்லை.  நான்  விபத்து ஏற்படுத்திய லாரியின் முன் பகுதியை பார்க்காததால் வாகனத்தின் ஓட்டுனரை பார்க்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய பின்பு வாகனத்தின் ஓட்டுனர் திரும்பி பார்த்தபோது அவரை நான்  பார்த்தேன். போலிசார் விசாரணையில் போது என் மகள் திண்டிவனத்திற்கு பரிட்சைக்கு செல்வதாக நான் குறிப்பிட்டேன்.  வழக்கு புகாரை  யார் கொடுத்தார் என்றால் என்  கணவர் வந்த பிறகு நானும் என் கணவரும் சென்று கொடுத்தோம்.  புகாரை விபத்தை பார்த்த கோபாலகிருஷ்ணன் எழுதினார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால்  சரியல்ல.  நாங்கள் என் மாமனார் இறந்ததற்கு இழப்பிடு கோரி  மாண்புமிகு செஞ்சி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளோம். நான் கூறுவதுபோல் சம்பவம்  நடைபெறவில்லை என்றாலும்,  விபத்தில்  இறந்த என் மாமனார் நஷ்டஈடு கோர வேண்டு என்பதற்காக எதிரி மீது தவறாக புகார் அளித்து அதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.  விபத்து ஏற்படுத்திய லாரியின் பொறிக்கப்பட்டு இருந்த செல்வ விநாயகர் என்ற பெயர்  எந்த கலரில் இருந்தது என்று எனக்கு சரியாக தெரியாது.  விபத்து ஏற்படுத்திய லாரியின் ஓட்டுனர் காக்கி சட்டை போட்டு இருந்தார்.  எட்டிப்பார்த்த லாரியின் ஓட்டுனர் முகம்  தூரமாக இருந்ததால் எனக்கு சரியாக தெரியவில்லை.  வழக்கு விபத்திற்கும் எதிரிக்கம் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.  நான் கூறுவதுபோல் சம்பவம் நடைபெற்று இருந்தால்  என் கணவர் கொடுத்த புகாரிலேயே லாரியின்  அங்க அடையாளங்களை  குறிப்பிட்டு இருப்போம் என்றால் சரியல்ல.  எனக்கு எழுத படிக்க தெரியாததால்  செல்வ விநாகர் எழுதப்பட்டு இருந்தது எனக்கு  தெரிய வாய்ப்பில்லை  என்றால்  சரியல்ல.  செல்வ விநாயகர்  என்று எழுதப்பட்டு இருந்த விதத்தை நான் போலிசார்  விசாரணையில் தெரிவித்தேன். எனக்கு லாரியில் செல்வ விநாயகர்  என்று  எழுதியிருப்பது தெரியாது என்றாலும், யாரோ ஒருவர் தெரிவித்ததன் பேரில் தெரிவிக்கிறேன் என்றால் சரியல்ல.  நான் சத்தியமங்கலம் காவல் நிலையத்திலும், செஞ்சி காவல் நிலையத்திலும்  சி.சி.டிவி கேமராவை பார்த்து விபத்து ஏற்படுத்திய லாரியை அடையளாம் காட்டினேன். சி.சி.டிவி பதிவில் நான் அடையளாம் காட்டிய லாரி முழுக்க முழுக்க பச்சை நிறத்தில் இருந்தது. வேறு நிறத்தில் இல்லை.  செல்வ விநாயகர் என்-று  லாரியின் முகப்பில் எழுப்பட்டு இருந்தது நான் சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் அடையாளம் காட்டினேன்.

Taken down before/me in Open
Court and read over/interpreted to
the witness and acknowledged by
him/her to be correct.
Judicial Magistrate, Gingee.